The Scarborough Hospital

**செய்தி வெளியீடு**

## கூட்டுத்தாபனத்தின் வருடாந்த உறுப்பினர்களின் சிறப்புக் கூட்டத்துடன் மருத்துவமனை ஒன்றிணைப்பு அடுத்த நிலைக்கு முன்னேறுகிறது

***ஒன்றிணைக்கப்பட்ட மருத்துவமனையின் நீண்ட கால வெற்றியை உறுதிப்படுத்துவதற்கான அரசாங்கத்தின் முக்கிய அர்ப்பணிப்புகளில் சபையின் இறுதி அங்கீகாரம் தங்கியுள்ளது***

**மார்ச் 5, 2014** - ஸ்கார்பரோ மருத்துவமனை (TSH) இயக்குனர்கள் சபை றூஷ்வலி சுகாதார அமைப்புடனான (RVHS) உத்தேச ஒன்றிணைப்பினை செயல்படுத்துதலைத் தொடர்வதற்கான ஆவணங்களுக்கு ஒப்புதல் அளித்துள்ளது.TSH சபையின் ஒப்புதல் இரண்டு மருத்துவமனைகளையும் ஒன்றிணைப்பதற்கான நடவடிக்கைகளின் தொடரில் சமீபத்திய ஒன்றாகும், அது அரசாங்கத்திலிருந்தான பல்வேறு நிதி வழங்கல் கோரிக்கைகளில் தங்கியிருப்பதுடன் இறுதியாக சுகாதாரம் மற்றும் நீண்ட காலப் பராமரிப்புக்கான அமைச்சின் ஒப்புதலுக்கு உட்பட்டது.

TSH இயக்குனர்கள் சபையினால் அதனது செவ்வாய்க்கிழமைக் கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட விடயங்களில் உள்ளடக்கப்பட்டவை: புதிய ஒன்றிணைப்புக்காக முன்மொழியப்பட்ட மருத்துவமனைக் கூட்டுத்தாபனத்திற்கான முக்கிய ஆவணங்கள்: ஒன்றிணைப்பதற்கான ஒப்பந்தம், உரிமைக் கடிதங்கள் நிர்வாக உப விதி, மற்றும் தொழில்முறை ஊழியர் உப விதி.

“RVHS உடனான உத்தேச ஒன்றிணைப்பின் பல்வேறு கட்டங்களை நாங்கள் கடந்து செல்கையில் இது ஒரு முக்கியமான மைல்கல்லாகும். சுகாதாரப் பராமரிப்பை மேம்படுத்தி நோயாளிகளை முன்னிலைப்படுத்துவதில் முனைப்புடன் இந்த உத்தேச ஒன்றிணைப்பைத் தொடர்வதற்கான எங்களின் பொறுப்பினை அது உறுதி செய்கிறது’’ என்று சொன்னார், TSH இயக்குனர்கள் சபையின் தலைவர் ஸ்டீபன் ஸ்மித். “RVHS உடன் தொடர்ந்து ஒருங்கிணைந்து பணியாற்றுவதற்கும் மற்றும் எங்கள் செயல்முறையில் மற்றுமொரு மைல்கல்லான - எங்களுடைய வரவிருக்கும் சிறப்பு வருடாந்த உறுப்பினர் கூட்டத்தையும் நாங்கள் எதிர்பார்க்கிறோம்’’

TSH மற்றும் RVHS இரண்டும் உறுதியான தடப் பதிவுகளை உயர் தரமான, ஆற்றல்மிக்க பராமரிப்பினை நோயாளிகளுக்கு வழங்குவதில் கொண்டுள்ளன, மற்றும் சுகாதார பராமரிப்பு வழங்குவது மாறி வரும் அதே நேரத்தில் சிறப்பான பராமரிப்பினை வழங்குவதைத் தொடர்வதற்கான வழிகளை கண்டறிவதற்கான பொறுப்பினை இரண்டு மருத்துவமனைகளும் கொண்டுள்ளன. TSH மற்றும் RVHS

இரண்டும் ஒன்றாக இணைந்து ஒரு ஒருங்கிணைந்த அமைப்பினை உருவாக்குவதற்காகப் பணியாற்றுகின்றன, அது:

- நமது வளர்ந்து வருகிற மற்றும் முதுமையடையும் சமுதாயத்தின் சுகாதார பராமரிப்புத் தேவைகளை நிறைவு செய்கிறது
- பராமரிப்புக்கான பொருத்தமான உள்ளூர் அணுகலை வழங்குகிறது;
- எமது நோயாளிகளுக்கும் அவர்களைப் பராமரிப்பவர்களுக்கும் தனிச்சிறப்பான அனுபவத்தை வழங்குகிறது; மற்றும்
- நமது வளங்கள் ஆற்றலுடன் பயன்படுத்தப்படுவதால் எமது உளளூர் சுகாதார பராமரிப்பு சேவைகள் இன்றும் எதிர்காலத்திலும் கிடைக்கப் பெறும்.

## TSH சிறப்பு சபைக் கூட்டம்

உத்தேச ஒன்றிணைப்பினை செயல்படுத்துவதற்கான TSH சபையின் முடிவு, தவிர்க்க முடியாத ஒன்றிணைப்பு செலவுகள் மற்றும் கட்டிடங்களைக் புதுப்பிப்பதற்கான மூலதனத் திட்ட நிதிகளை நிறைவேற்றுவதற்காக அரசாங்கத்திடமிருந்து நிதி கோருதலுக்கான தீர்மானத்தில் தங்கியுள்ளது.

TSH பேர்ச்மவுண்ட் வளாகத்தின் ஐரின் ஸ்டிக்லேண்ட் சென்டரில் சனிக்கிழமை மார்ச் 15, 2014 காலை 9:00 மணிக்கு ஒரு சிறப்புப் பொது சபைக் கூட்டத்தில் சபையின் இறுதி முடிவு எடுத்தல் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளது.

## TSH வருடாந்த உறுப்பினர்களுக்கான சிறப்புக் கூட்டம்

TSH-ன் வருடாந்த உறுப்பினர்களுக்கான சிறப்புக் கூட்டம் முன்மொழியப்பட்ட TSH மற்றும் RVHS ஒன்றிணைப்புக்கு உறுப்பினர்கள் வாக்களிப்பதற்காக நடாத்தப்படவிருக்கிறது.

**திகதி** : செவ்வாய்க்கிழமை, மார்ச் 18, 2014
**நேரம்:** மாலை 7:00 – 9:00
**இடம்:** ஸ்கார்பரோ மருத்துவமனை, பொது வளாகம், அவைக்கூடம்

-30-

கனடாவில் அதிகம் பன்முகப்பட்ட மக்கள் வாழும் பகுதி ஒன்றில் அமைந்துள்ள ஸ்காபரோ வைத்தியசாலை(TSH) தனது இரண்டு வளாகங்கள் (பேச்மவுண்ட் வளாகம்/ பொது வளாகம்) வாயிலாகவும் அவற்றைச் சூழ்ந்துள்ள ஆறு கிளை நிலையங்கள் வாயிலாகவும் நோயாளர் முதன்மைசார் கருணைச் சேவையை வழங்குகின்றது. TSH ஒரு பிரதேச இரத்த மாற்று நிலையமாகும். அத்துடன் மனநோய் வைத்தியம், எலும்புச் சிகிச்சை, குழந்தை வைத்தியம், நெடுங்கால நோய்களைத் தடுத்தல், புற்றுநோய் மருத்துவம் போன்றவற்றுக்கு அது பெயர் பெற்றது. ரோறன்ரோ பல்கலைக்கழகத்துடன் இணைந்துள்ள TSH குருதிக் குழாய் அறுவைச் சிகிச்சை, இதயத்துடிப்புச் சீராக்கம், கண்சிகிச்சை போன்றவற்றுக்குப் பிற வைத்திய சாலைகளிலிருந்து நோயாளர் அனுப்பப்படும் நிலையமாகவும் விளங்குகின்றது.

மேலதிக தகவல்களுக்குத் தொடர்புகொள்ளவும்:

Holly-Ann Campbell
Director, Communications and Engagement
The Scarborough Hospital
(416) 438-2911, ext. 8308
hocampbell@tsh.to